வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி 20.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, மேற்கு வங்கம் மாநிலத்தில், 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான 2 முக்கிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை தொடக்கி வைத்தார்.
- இந்தியாவின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி, 31 பில்லியன் டாலரை எட்டி உள்ளதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- இன்றைய கால சூழலை ஒப்பிடுகையில், ஆரோவில் வாழ்வதற்கு ஏற்ற ஒரு இடமாக திகழ்கிறது என, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா புகழாரம் சூட்டியுள்ளார்.
- புதுச்சேரியில் நாளை, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம், நடைபெற உள்ளது.

-----------------------------

<u>*குடியரசுத் துணைத் தலைவர்* (9)</u>

ஆடை மற்றும் ஜவுளித் தொழில் துறை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய தூண்களாக விளங்குகின்றன என, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தியா உலக அளவில், 6ஆவது பெரிய ஜவுளி ஏற்றுமதி நாடாக திகழ்கிறது என்றும், இது நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில், ஜவுளித் தொழிலின் மகத்தான பங்களிப்புக்கு சான்றாக அமைந்துள்ளது என, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

-----------------------------

*மோடி மேற்கு வங்கம் 1 (9)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, மேற்கு வங்க மாநிலம் நாடியா மாவட்டத்தில், மொத்தம் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான 2 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை தொடக்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் உரையாற்றினார். மோசமான வானிலைக் காரணமாக, நாடியா மாவட்டத்தில் உள்ள தாஹேர்பூரில், பிரதமரின் ஹெலிகாப்டர் தரையிறங்க முடியாததால், காணொலிக் காட்சி வாயிலாக அவர் உரையாற்றினார். அப்போது பேசிய பிரதமர், நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட மேற்குவங்க பகுதிகளின் இணைப்பை மேம்படுத்த, தனது அரசாங்கம் தொடர்ந்து பாடுபட்ட வருவதாக கூறினார்.

*மோடி மேற்கு வங்கம் 2 (18)*

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடியால் இன்று தொங்கப்பட்ட நெடுஞ்சாலைத் திட்டத்தினால், கொல்கத்தா-சிலிகுரி இடையிலான பயணம், 2 மணி நேரம் குறையும் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தினால் வாகனங்கள் வேகமாகவும், தடையின்றியும் செல்வதை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும் அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கும் உத்வேகம் அளிப்பதுடன், மாநிலம் முழுவதும் சுற்றுலாவின் வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக அமையும்.

தொடர்ந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று குவஹாத்தியில், லோகப்பரிய கோபிநாத் பர்தோலாய் சர்வதேச விமான நிலையத்தின், புதிய, முனையக் கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்த புதிய முனைய கட்டிடத்தின் வெளியே நிறுவப் பட்டுள்ள. அசாமின் முதல் முதலமைச்சரான கோபிநாத் பர்தோலாய்-ன் 80 அடி உயர சிலையை பிரதமர் திறந்து வைத்தார். குவஹாத்தியின் போராகாம் பகுதியில் உள்ள, தியாகிகள் நினைவு வளாகத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க, அசாம்

இயக்கத்தின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு, அவர் மலரஞ்சலி செலுத்துகிறார். அசாம் பள்ளத்தாக்கு உர உற்பத்தி நிறுவனம் சார்பில், அமோனியா-யூரியா உற்பத்தி ஆலை அமைக்கும் பணிகளை, பிரதமர் பூமி பூஜை செய்து தொடக்கி வைப்பார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*சாஸ்த்ர சீமா பால்* (9)

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில், சாஸ்த்ர சீமா பால் படையினரின் பங்கு இன்றியமையாதது என பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார். இப்படையின் நிறுவன தினத்தை ஒட்டி, அவர் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சவாலான சூழ்நிலையில், இப்படையினரின் துணிச்சல் மிகு செயல்பாடுகள் போற்றுதலுக்குரியது எனவும், பிரதமர் தெரிவித்துள்ளர். இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், பேரிடர் காலங்களிலும், இப்படையினரின் பங்களிப்பு இன்றியமையாதது என குறிப்பிட்டுள்ளார்.

-----------------------------

*மை கவ்* (6)

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் இடம்பெற வேண்டியஅம்சங்கள் குறித்து, பொது மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்க ஏதுவாக, மை கவ் இணைய தளத்தில், வழிவகை செய்யப் பட்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் பட்ஜெட் தயாரிப்பதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

-----------------------------

***அஷ்வினி வைஷ்ணவ் (10)***

இந்த நிதியாண்டின் முதல் 8 மாதங்களில், இந்தியாவின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி, 31 பில்லியன் டாலரை எட்டி உள்ளதாக, மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். ஆங்கில நாளிதழில் வெளியான கட்டுரையை சமூக ஊடகப் பதிவில் பகிர்ந்து கொண்ட அமைச்சர், இந்தியாவின் முதல் 30 ஏற்றுமதி பொருட்களில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதிதான் அதிவேகமாக வளர்ந்து வருவதாக, குறிப்பிட்டுள்ளார். இந்த வளர்ச்சி, வேலை வாய்ப்புகள், திறன் மேம்பாடு, மற்றும், தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஊக்குவிப்பதாக, அமைந்துள்ளது என, திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

------------------------------

*ஜி ராம் ஜி* (7)

விக்சித் பாரத் ஜி ராம் ஜி மசோதா, சமூக நலனை பின்னுக்கு தள்ளுவதற்காக அல்ல என்றும், மாறாக, வளர்ந்த மற்றும், சுயசார்பு கொண்ட கிராமப்புற இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த ஒரு புதுப்பித்தல் என்று, பிரதமர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் கவுகானின், ஆங்கில நாளிதழ் கட்டுரையை பகிர்ந்து கொண்ட அவர், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

-----------------------------

*மன்சுக் மாண்டவியா* 1 (10)

உலகின் இலக்கியங்கள் ஒன்றிணையும் ஒரு உலகளாவிய இடமாக உருவெடுக்கும் அரிய ஆற்றல் ஆரோவில்லுக்கு உள்ளது என்றும், மொழி பெயர்ப்பு என்பது வெறும் இலக்கிய செயல் மட்டுமல்ல, அது ஒரு நாகரிக பாலம் என்றும், நாடுகளை இணைப்பதில் இலக்கியத்தின் பங்கு முக்கியமானது என்று மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும்

விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறினார். புதுச்சேரி ஆரோவில் ஒற்றுமை அரங்கத்தில் இன்று நடைபெற்ற ஆரோவில் இலக்கிய விழாவின், முழு சிறப்பு அமர்வில் மாணவர்களிடையே உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*மன்சுக் மாண்டவியா 2 (19)*

(வாய்ஸ்)

புதுச்சேரியை அடுத்த ஆரோவில்லில் நடைபெற்று வரும் இலக்கிய விழாவின் சிறப்பு நிறைவு அமர்வில், மத்திய தொழிலாளர், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுக்கு, ஆரோவில் அறக்கட்டளையின் செயலாளரும், குஜராத் மாநில முதன்மை செயலாளருமான டாக்டர் ஜெயந்தி ரவி தலைமை தாங்கினார். முன்னதாக, மத்திய அமைச்சருடன் இணைந்து, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், தலைமை செயலர் டாக்டர் சரத் சௌகான் ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி, விழாவை துவக்கி வைத்தனர். உலகம் முழுவதும் அதிகரித்து வரும் பிளவுகள், குறைந்து வரும் கவனக் குவிப்புத் திறன், மற்றும், உரையாடலுக்கான வாயப்புகள் சுருங்கி வரும் இக்காலத்தில், ஆரோவில் வாழ்வதற்கு ஏற்ற ஒரு இடமாக திகழ்கிறது என, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா புகழாரம் சூட்டினார். தொடர்ந்து நாளை புதுச்சேரி கடற்கரை சாலையில் நடைபெற உள்ள Fit India Sundays On cycle திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில், மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டு, சைக்கிள் பேரணியை துவக்கி வைக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில், கேல் ரத்னா விருதாளர்கள், மற்றும், திரைப்பட இயக்குநர் திருமதி ஐஸ்வர்யா ரஜினிகாந்த் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர்.

-----------------------------

<u>போலியோ சொட்டு மருந்து (13)</u>

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை சார்பில், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம், நாளை நடைபெற உள்ளது. இம்முகாமினை, திலாஸ்பேட்டையில் உள்ள அரசு பெண்கள் மேல் நிலை பள்ளியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி கலந்து கொண்டு தொடக்கி வைக்க உள்ளார். புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள அனைத்து கிராமம் மற்றும் நகரப் பகுதிகளிலும், அமைக்கப்பட்டுள்ள 425 முகாம்களில், நாளை காலை 7 மணி முதல், பிற்பகல் 3 மணி வரை, போலியோ சொட்டு மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான, பேருந்து நிலையம், ரயில் நிலையம், பூங்காக்கள், கோவில்கள், மற்றும் வணிக வளாகங்ள் உள்ளிட்ட 31 இடங்களிலும், இந்த முகாம்கள் நடைபெறும். இதன்மூலம், 74 ஆயிரத்து 698 குழந்தைகள் பயன்பெறுவார்கள் என, சுகாதாரத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

<u>காரைக்கால் (13)</u>

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில், சிறிய உணவு பதப்படுத்தும் அலகு திறப்பு மற்றும் விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கும் விழா இன்று நடைபெற்றது. இவ்விழாவில், புதுச்சேரி வேளாண் அமைச்சர் திரு. சி. ஜெயகுமார், கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு இடுபொருள், இயந்திரங்களை வழங்கி, சிறப்புரையாற்றினார். விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தேவைப்படும் அனைத்து உதவிகளையும், முதலமைச்சர் திரு.ரங்கசாமி தலைமையிலான அரசு செயல்படுத்தி வருவதாக, அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. திருமுருகன், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. ரவி

பிரகாஷ், ஒருங்கிணைந்து பூச்சி மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் முனைவர் தங்கவேல் உள்ளிட்ட வேளாண் துறை அதிகாரிகள், பலர் கலந்து கொண்டனர்.

-----------------------------

<u>நிதின் நபின் (10)</u>

பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு. நிதின் நபின் பதவியேற்ற பின், முதல் முறையாக 2 நாள் பயணமாக, புதுச்சேரிக்கு வருகை புரிந்துள்ளார். அவரின் வருகையை முன்னிட்டு புதுச்சேரி மாநில எல்லையான கோரிமேட்டில், பிஜேபி மாநில தலைவர் திரு. ராமலிங்கம் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர், அவருக்கு பூங்கொத்து கொடுத்தும், சால்வை அணிவித்தும் வரவேற்பு அளித்தனர். திறந்த வேனில் நின்றபடி, தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் புடைசூழ, பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு. நிதின் நபின் ஊர்வலமாக சென்றார்.

-----------------------------

<u>புதுவை பல்கலைக்கழகம் (7)</u>

புதுவை பல்கலைக்கழகத்தின் நிகழ் கலைகள் துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றும் டாக்டர் பவித்ராவிற்கு, விசிஷ்ட ரங்க சேவா புரஸ்கார் 2025 என்னும், தேசிய நாடக விருது வழங்கப் பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு, உதவி பேராசிரியர் டாக்டர் பவித்ராவை வாழ்த்தி கவுரவித்தார். இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம், ஆந்திரா பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து, இந்த விருதினை வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

-----------------------------

ஹெரால்ட் வழக்கு (5)

நேஷனல் ஹெரால்ட் வழக்கில் காங்கிரஸ் கட்சி தலைவர்கள் திருமதி சோனியா காந்தி, மற்றும், திரு ராகுல்காந்தி உள்ளிட்டோருக்கு எதிரான பண மோசடி புகாரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மறுத்த, விசாரணை நீதிமன்ற உத்தரவை எதிர்த்து அமலாக்கத் துறை, டெல்லி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

------------------------------

கிரிக்கெட் (6)

வரும் 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள, ஐசிசி டி-20 உலக கோப்பைக்கான, 15 பேர் கொண்ட, இந்திய அணியை, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் இன்று அறிவித்தது. சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்த அணியில், அக்சர் பட்டேல் துணைக் கேப்டனாக செயல்படுவார். மேலும், அபிஷேக் ஷர்மா, சஞ்சு சாம்சன், திலக் வர்மா, ஹர்திக் பாண்டியா உள்ளிட்ட பிரபல வீரர்களும் பங்கேற்க உள்ளனர்.

------------------------------